23rd September 1958]

Hospitals

*436 *Q*.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் ரெவினியு அமைச்சர் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தனியார் நடத்தும் ஆஸ்பத்திரிகள் (ஜில்லாவாரியாக) எத்தனை ?

(ஆ) 1951 முதல் 1957 வரை ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு கிராண்ட் ஒவ்வொரு ஆஸ்பத்திரிக்கும் கொடுக்கப்பட்டது ?

(இ) 1952 முதல் 1957 வருடத்திற்குள் இடையில் கொடுத்துக் கொண்டிருந்த கிராண்டை எந்தெந்த ஆஸ்பத்திரிகளுக்கு ஜில்லாவாரியாக நிறுத்தப்பட்டது ?

(ஈ) அதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) to (*d*) A statement [a] is placed on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், இவ்விதமாக லட்சக்கணக்கான ரூபாய்களை தனிப்பட்டவர்கள் நடத்தும் ஆஸ்பத்திரிகளுக்கு கிராண்டாக கொடுத்தும்கூட ஒரு சில ஆஸ்பத்திரிகளில் எந்த ஜாதியார் அந்த ஆஸ்பத்திரியை நடத்துகிறார்களோ அந்த ஜாதியார்களுக்கு மாத்திரம் தான் அந்த ஆஸ்பத்திரிகளிலும் காலேஜ்களிலும் இடம் கொடுக்கிறார்கள். ஆகவே ஜாதி மத இன பேத வேறுபாடில்லாமல் எல்லோருக்கும் இடம் கொடுப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் அவர்கள் எதை மனதில் வைத்துக்கொண்டு இவ்விதம் சொல்லுகிறார்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. அந்த வேலூர் கிறிஸ்டியன் காலேஜ்க்கு இப்போது கிராண்டு கொடுப்பதில்லை.

SRI M. S. SELVARAJAN : இப்போது கொடுக்கப்பட்டிருக்கும் லிஸ்டிலிருந்து தனிப்பட்டவர்களால் நடத்தும் சில ஆஸ்பத்திரிகளுக்கு கிராண்ட் கொடுக்கவில்லை என்று தெரிகிறது. அவர்கள் அரசாங்கத்தினிடத்தில் மனு செய்து கோராதது குற்றமா ? அல்லது அவர்களுக்கு வெளியிலிருந்து பண உதவி கிடைக்கிறது என்ற காரணத்திற்காக அவர்களுக்கு கொடுக்கப்படவில்லையா என்பதை அறிய விரும்புகிறேன் ? வெளி நாட்டிலிருந்து உதவி பெறாத ஸ்தாபனங்கள் அரசாங்க உதவி கோரி மனுச் செய்திருந்தால் அம் மனுக்கள் அனுதாபத்துடன் கவனிக்கப்பட்டிருக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கூடுமானவரை எங்கெல்லாம் தனிப்பட்டவர்களுக்கு கொடுக்க முடியுமோ இந்த இடங்களில் எல்லாம் கொடுக்கப்பட்டு வருகிறது.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : ஸார், அப்படி தனியார் நடத்தக்கூடிய ஆஸ்பத்திரிகளில் கவர்ண்மெண்டிலிருந்து கிராண்டு வாங்கிக் கொண்டு அதை ஒரு குறிப்பிட்ட வகுப்பினர்களுக்காக மட்டும் வைத்துக் கொள்கிறார்கள் என்ற புகார்கள் வந்திருக்கின்றதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அம்மாதிரி புகார் இல்லை. மற்ற எல்லோரையும் அங்கு சேர்த்துக் கொள்கிறார்கள்.

SRI S. NAGARAJA MONIGAR : ஸார், வேலூர் கிறிஸ்டியன் காலேஜுக்கு இந்தத் தொகை கொடுக்கப்படுகிறது என்று அமைச்சர் சொன்னார்கள் அப்படியானால் ஜாதி மத பேதமில்லாமல் அங்கு எல்லோரும் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்களா ? இத்தகைய பாகுபாடு நடக்குமானால் அம்மாதிரி ஸ்தாபனங்களுக்கு சர்க்கார் கூடியமட்டில் தொகை தராமல் இருக்க முயற்சிப்பார்களா ?

---

[a] Printed as Appendix II on pages 575–582 infra.

THE HON. SRI M. A. MANICKAVELU : அதனுல் தாமன் இப்போது கொடுக்கப்படும் தொகை நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்தக் காலேஜ் நிர்வாகம் அவர்கள் பணச் செலவிலேயே செய்து வருகிறுர்கள்.

Pathways to Harijan Colonies

* 437 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state with reference to the answer given to the starred question No. 265 on 10th March 1958 the further action taken so far to provide pathways to Harijan colonies referred to therein?

THE HON. SRI P. KAKKAN : A statement[a] is placed on the table of the House.

SRI M. JAGANNATHAN : ஐயா, மேஜை மீது வைக்கப்பட்டிருக்கிற இந்த அறிக்கையிலே ஒளிந்தியாம்பட்டு கிராமத்தில் ரோடு போடும் விஷயத்தில் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு விட்டதாகவும் ரோடை ஹரிஜனங்களே போட்டுக்கொள்ளவேண்டுமென்று சொல்லப்பட்டிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ரோடு போட்டுக்கொள்வதற்கு சர்க்கார் பண உதவி செய்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் இதற்குத் தனி கேள்வி போடவேண்டும்.

Palar waters

* 438*Q.*—SRI A. A. RASHEED : AND SRI S. K. PALANISAMI : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government have made a representation to the Union Government regarding the appointment of a Commission to go into the question of sharing the waters of Palar between Madras and Mysore?

THE HON. SRI P. KAKKAN : Yes, Sir. In March 1955, this Government addressed the Government of India to constitute a Council under Article 263 of the Constitution of India to enquire into the Palar water dispute between Madras and Mysore and suggest suitable remedies. A committee consisting of the representatives of the Government of India and the Governments of Madras and Mysore discussed the question and arrived at certain conclusions. The question was also discussed with the Union Minister for Irrigation and Power. The Government do not wish to pursue the matter further for the time being.

* 439 *Q.*—SRI M. P. SARATHI : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) டெல்லியில் நீர்பாசனம் பற்றிய மகாநாட்டில் பாலாறு தண்ணீர் பற்றிய பிரச்னை எழுப்பப்பட்டதா ?

(ஆ) அதுபற்றி தற்போது எந்த அளவுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) The Government have examined the findings of the Committee consisting of the representatives of the Government of India and the Governments of Madras and Mysore that enquired

[a] Printed as Appendix III on page 583 infra.